# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆவணி 11 செவ்வாய்க்கிழமை(27-08-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 192

# உடன் யுத்த நிறுத்தம் செய்ய தமிழ்க் கட்சிகள் வற்புறுத்து

## இரு தரப்பினரிடமும் கோரிக்கை

கொழும்பு, ஓகஸ்ட் 27

வடக்கு - கிழக்கு அப்பாவி மக்கள் படும் அவலங்களுக்கு நிவாரணம் காண்பதற்காக உடனடியாகப் போர்நிறுத்தம் கடைப் பிடிக்க வேண்டியது அவசியமாகும்.

தமிழ் அரசியற் கட்சிகளின் தலைவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அரசாங்கத்தையும் இவ்வாறு வலியுறுத்திக் கேட்டிருக்கிறார்கள்.

அத்தகைய போர்நிறுத்தம், தொடர்ந்து போரை உக்கிரமாகத் தொடர்வதற்கான அடிப்படையை வகுப்பதாக அமையாமல் நிரந்தர சமாதானத்தைத் தோற்றுவிப்பதற்கான அடிப்படையாக அமையவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

### சிவசிதம்பரம் கருத்து

இந்த விடயம் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் கூறியதாவது:-

"இராணுவ நடவடிக்கையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் நலன் கருதி உடனடியாகப் போர் நிறுத்தம் செய்வது அவசிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டுவெடிப்பு

திருகோணமலை நகரில் உள்ள ரெலோ அமைப்பின் அலுவலகத்தில் நேற்று குண்டு ஒன்று வெடித்தது.

இந்தச் சம்பவத்தின் போது அந்த அமைப்பைச் சேர்ந்த அரசியல்வாதி ஒருவர் கொல்லப்பட்டார் என்றும்—

ஐந்து உறுப்பினர்கள் காயமடைந்தனர் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

இறந்த அரசியல்வாதியின் பெயர் பாஸ்கரன் என்றும்- தெரிவிக்கப்பட்டது. (இ-10)

## ஈழத் தமிழர்கள் நேற்று ஜெனிவாவில் ஆர்ப்பாட்டம்

நியூயோர்க், ஓக. 27

ஜெனிவா நகரில் நேற்று சுமார் 8 ஆயிரம் இலங்கைத் தமிழர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்கள்.

ஐ. நா. மன்றத்தின் மனித உரிமைகளுக்கான உப- ஆணைக்குழுவின் அமர்வு நடந்து கொண்டிருக்கும் இடத்துக்கு இவர்கள் ஊர்வலமாகச் சென்றனர்.

"ஆயுதக் கொள்வனவுகளை நிறுத்து", "நிதி உதவியை நிறுத்து", ஆயுத உதவிகளை நிறுத்து" என்று கோஷமிட்டவாறு ஊர்வலம் சென்றனர்.

★ இலங்கைப் படைகள் வடக்கில் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் பகுதிகளில் இருந்து வெளியேற வேண்டும்.

★ தமிழர்களின் சுயாட்சி உரிமை அங்கீகாரம் செய்யப்படவேண்டும்.

★ வெளிநாடுகள் இலங்கைக்கு வழங்கும் 'ஆயுத, நிதி உதவிகள் நிறுத்தப்பட வேண்டும்.

இப்படிப் பல கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றை அவர்கள் ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான உப-

(6ஆம் பக்கம் பார்க்க)

## கிரிக்கெட் போட்டியை முன்னிட்டே புலிகள் மீதான தடை ஒத்திவைப்பு

### கொழும்புப் பத்திரிகை தகவல்

கொழும்பு, ஓக. 27

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடை கடந்த வெள்ளிக்கிழமை முதல் அமுலுக்கு வர இருந்தது. ஆனால் தற்பொழுது கொழும்பில் நடக்கும் கிரிக்கெட் போட்டியைமுன்னிட்டு தடை விதிக்கும் அறிவிப்பை வெளியிடுவது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இப்படி சண்டே ரைம்ஸ் ஞாயிறு வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

தடை அறிவிப்பை அடுத்து விடுதலைப் புலிகள் அமைப்பிடமிருந்து ஏற்படக் கூடிய எந்தவொரு எதிர் விளைவும் கிரிக்கெட் போட்டியைக் குழப்பி விடலாம் என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்தே தடை அறிவிப்பு ஒத்தி வைக்கப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை கூடிய அமைச்சரவை இது குறித்து விரிவாக ஆராய்ந்தது. எனினும் சட்ட மா அதிபரின் ஆலோசனையின் பேரில்முடிவு எடுப்பது ஒத்திவைக்கப்பட்டது.

எனினும் வியாழக்கிழமை மாலை அமைச்சரவை மீண்டும் விசேடமாகக் கூடி தடை குறித்து ஆராய இருந்தது.

ஆனால் கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு புலிகள் அமைப்பு மீதான தடை விதிப்பை பின்போடுவது என்று ஜனாதிபதி தெரிவித்தார் என்று அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் கடந்த புதன்கிழமை கூட்டப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளைத் தடை செய்வது குறித்து இரு வித கருத்துக்கள் நிலவியதாக அரச சார்பு கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கடைசி நேரம் ஜனாதிபதி மனம் மாறியது ஏன்?

### சர்வதேச அழுத்தம் காரணமா?

கொழும்பு, ஓக. 27

விடுதலைப் புலிகள் அமைப்பை சட்ட பூர்வமாகத் தடை செய்வது குறித்து ஆராய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த வியாழன் மாலை அமைச்சரவையை விசேடமாகக் கூட்டி இருந்தார் அல்லவா?

அந்தக் கூட்டத்தில் புலிகளைத் தடை செய்வது குறித்து ஜனாதிபதி எதுவுமே பிரஸ்தாபிக்கவில்லை என்று சண்டேரைம்ஸ் அரசியல் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

விசேட அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டுவதற்கே பொருத்தமில்லாத வாழ்க்கைச் செலவு உயர்வு, உள்ளூராட்சித் தேர்தல் ஆகியவை குறித்தே ஜனாதிபதி அங்கு பிரஸ்தாபித்தாராம்.

ஜனாதிபதி கடைசி நேரத்தில் தனது மனதை மாற்றிக் கொண்டு இந்தப் பிரச்சினை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை தாக்குதல் குறித்து விசாரிக்க நால்வர் குழு

கொழும்பு, ஓக. 27

முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதல் சம்பவம் குறித்து விசாரிப்பதற்காக நான்கு பேர் கொண்ட குழு ஒன்றை பாதுகாப்பு அமைச்சு கடந்த வாரம் நியமித்துள்ளது.

மேஜர் ஜெனரல் பட்ரிக் பெர்னாண்டோ, பிரிகேடியர் காமினி குணசேகரா, லெப்டினன்ட் கேணல் வஜிரா விஜேகுண வர்த்தனா,கேணல் மகேந்திர விஜேரட்ண ஆகியோரே இக்குழுவுக்கு நியமிக்கப்பட்டிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

(உ)

## புலிகளின் தாக்குதலை எதிர்பார்த்து

## மன்னார் மற்றும் மணலாறு பகுதிகளுக்கு மேலதிக படை

கொழும்பு, ஓக. 27

மன்னார், மணலாறு பகுதிகளில் புலிகளின் தாக்குதல்கள் இடம்பெறலாம் எனச் சந்தேகிக்கப் பட்டதால் இராணுவம் மேலதிகமாக பல பட்டாலியன்களை கடந்த வாரம் அப்பகுதிக்கு அனுப்பி வைத்தது.

"த சண்டே லீடர், பத்திரிகையில் அதன் பாதுகாப்புச் செய்தியாளர்கள் இத் தகவலை வெளியிட்டிருக்கின்றனர்.

"உண்மை வெற்றி" இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டு கிளிநொச்சிக்கு ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரத்தில் — பரந்தன் பகுதியில்— நிலைகொண்டுள்ள படையினரின் பயணத்தை திசை திருப்புவதற்காக—

மன்னார், முல்லைத்தீவுப் பகுதிகளில் புலிகள் தாக்குதல்களை நடத்தக் கூடும்.

அதே நேரம் அண்மையில் கைப்பற்றிய முல்லைத்தீவுப் பிரதேசம்— தமது நடவடிக்கைகளுக்கு அதன் புவியியல் நிலையம் பொருத்தமான இடம் என்பதால்—அதனைத் தமது பிரதான — முக்கிய — தளமாக புலிகள் மாற்றி வருகின்றனர்—என்றும் அச் செய்தியாளர்கள் குறிப்பிட்டனர்.

(உ)

## "வீட்டிலேயே அனுராவை பெற்றேன்" அனுருத்தவுக்கு சிறிமா சாட்டை!

கொழும்பு, ஓக. 27

"சுனேத்ரா, சந்திரிகா, அனுரா ஆகிய மூவரையும் நான் வீட்டிலேயே பெற்றெடுத்தேன். ஜெனரல் அனுருத்த ரத்வத்தை கூறுவது போல் ஆஸ்பத்திரியில் அல்ல."

—தமது ஒன்றுவிட்ட சகோதரரும் அமைச்சருமான ஜெனரல் அனுருத்த ரத்வத்தைக்கு எழுதிய கடிதம் ஒன்றில் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இவ்வாறு தெளிவுபடக் கூறியிருக்கின்றார்.

இலங்கையின் இரண்டு பிரதமர்களான எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா, திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகிய இருவருக்கும் பிறந்த குழந்தை அல்ல அனுரா பண்டாரநாயக்கா என்றும்—

ஆஸ்பத்திரியில் குழந்தை மாறிவிட்டது என்றும்—

பொதுக்கூட்டங்களில் அனுருத்த ரத்வத்தை பகிரங்கமாகக் கூறிவருவதாகக் கூறப்படுகின்றது.

கடும் சீற்றத்துக்கு மத்தியிலும் இந்த விடயத்தில் மௌனம் சாதித்து வந்த திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, மீண்டும் மீண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அனுருத்தமீது சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகள்

### அனுரா தாக்கல் செய்வார்

கொழும்பு, ஓக. 27

தமது பிறப்புத் தொடர்பாக சந்தேகம் கிளப்பும்வகையில் பொதுக் கூட்டங்களில் தொடர்ந்து பகிரங்கமாகப் பேசிவரும் அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தைக்கு எதிராக சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகளைத் தாக்கல் செய்ய அனுரா பண்டாரநாயக்கா முடிவு செய்திருக்கின்றார்.

சிவில் வழக்கில் தமக்கு நஷ்ட ஈடாக ஐந்து கோடி ரூபா வழங்கும்படி அமைச்சர் ரத்வத்தைக்கு உத்தரவிடுமாறு நீதிமன்றத்திடம் அனுரா கோருவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கிரிமினல் வழக்குத்தொடர்பாக அமைச்சர்ரத்வத்தைக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சமூக அபிவிருத்தி மன்றம்
## கலந்துரையாடல்

நாளை **28. 08 96** புதன்கிழமை காலை **10 00** மணிக்கு எமது யாழ். தலைமைக்காரியாலயத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் முக்கிய விடயங்கள் ஆராய இருப்பதனால் மன்ற பணிப்பாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள், அங்கத்தவர்கள் அனைவரையும் தயவு செய்து தவறாது சமுகம் கொடுத்து ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**–நிர்வாகச் செயலாளர்**

(42427)

## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து, உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக, உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே, என் வாழ்வின் எச் சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு, இச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும், எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன். த. தி

(42415)

## முக்கிய அறிவித்தல்

வலி. கிழக்கு வட பகுதி
**பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
அச்சுவேலி

**கிளைக்குழுத் தேர்தலுக்கான முன்னோடி நடவடிக்கைகள்**

1. கிளைக் குழுத்தேர்தலுக்காக சகல கிளைகளின் வாக்காளர் பட்டியல்களும் **30-09-96** உடன் மூடப்படும்.
2. சங்க உபவிதிக்கமைய ரூபா **100/-** க்குக் குறையாத பங்குப் பணத்தைக் கொண்டுள்ளவர்களின் பெயர்களே வாக்காளர் பட்டியலில் இடம்பெறும்.
3. ஏற்கனவே ரூபா **100/-** க்குக் குறைவான பங்குப் பணத்தைக் கொண்டுள்ளவர்கள் மீதிப் பணத்தைத் தத்தமது கிளைகளில் **30 - 09 - 96** ஆம் திகதிக்கு முன்னர் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்று வாக்காளராகும் தகுதியை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
4. அங்கத்தவர்களின் வசதி கருதி பங்கு விவரப்பட்டியல்கள் சகல கிளைகளிலும் தலைமைக்காரியாலயத்திலும் **27-08 96** ஆம் திகதி தொடக்கம் **30-09-96** ஆம் திகதி வரைக்கும் பார்வைக்கு வைக்கப்படும்.
5. இயங்காத கிளைகளில் அங்கத்தவர் பங்கு விபரப் பட்டியல்கள் பின்வரும் கிளைகளில் **27 08-96** ஆம் திகதி தொடக்கம் **30-08-96** ஆம் திகதி வரைக்கும் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும்.

| தற்போது இயங்காத கிளைகளின் விவரம் | காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் கிளைகள் |
| --- | --- |
| 1. அச்சுநகர் கிளை இல. 01<br>2. தம்பாலை கிளை இல. 03<br>3. இடைக்காடு கிளை இல. 04<br>4. வள. கிழ. கிளை இல. 05<br>5. வள. மேற். கிளை இல. 06<br>6. கதிரிப்பாய் கிளை இல. 18 | அச்சுவேலி வடக்கு கிளை இல 19. (அச்சுவேலி சந்தி) |
| 7. புத்தகலட்டி கிளை இல. 11 | ஆவரங்கால் வடக்கு கிளை இல. 21 |
| 8. வாதரவத்தை கிளை இல. 17 | சிறுப்பிட்டி கிளை இல. 14 |

க. பேரின்பநாயகம்
தலைவர்

பொ. பாலகிருஷ்ணன்
செயலாளர்

(சி/2803)

## பொது அறிவு வழிகாட்டி நூல்

அரச நியமன போட்டிப் பரீட்சைகளுக்குரிய இந்நூலை தபாலில் பெறவிரும்புவோர் வே தபேந்திரன் எனும் பெயருக்கு யாழ். பிரதம தபாலகத்தில் மாற்றக்கூடியவாறு ரூபா **100** க்கான காசுக்கட்டளை (Money Order) எடுத்து உங்கள் சுய முகவரியைத் தெளிவாக எழுதி,

70/7, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு அனுப்பி உடன் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு:- தற்போதைய போக்குவரத்து நிலைமையைக் கருத்தில் கொண்டு இந்த ஏற்பாடு செய்யப்படுகின்றது.

(42428)

## ஓய்வூதிய வவுச்சர்கள்.

கடந்த வாரம் காங்கேசன் துறைக்கு வந்து சேர்ந்த 'மாஹோ' கப்பலில் எடுத்து வரப்பட்டிருந்த ஓகஸ்ட் மாதத்துக்கான ஓய்வூதிய வவுசசர்கள் நேற்று செயலகத்துக்கு வந்துசேர்ந்தன.

## சமய சந்நிதிகளில்

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தில் நாளை புதன்கிழமை பஞ்சத் திருவிழாவாகும். (அ-30)

* * *

மூளாய் வரதன்புலோசித்தி விநாயகர் ஆலயத் தேர்த் திருவிழா இன்று காலை எட்டு மணிக்கு நடைபெறுகிறது. (அ)

* * *

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழா இன்று காலை நடைபெறுகிறது. நாளை தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (அ-30)

* * *

கொழும்புத்துறை ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலயத்தில் இன்று மு.ப. 10 மணிக்கு நடராசர் விஷேட அபிசேகமும் பூசையும் நடைபெறவுள்ளது. (அ-30)

* * *

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலய தேர்த்திருவிழா இன்று காலை 9-30 மணிக்கு நடைபெறுகின்றது நாளை தீர்த்தோற்சவமும் நாளை மறுதினம் பூங்காவனமும் இடம் பெறும். (அ-3)

* * *

நல்லூர் சிவன் கோயிலில் இன்று காலை 9 மணிக்கு நடராசர் அபிஷேகம் நடைபெறும். (அ-30)

* * *

அரியாலை நீர் நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய தேர்த் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கும், தீர்த்தோற்சவம் புதன்கிழமை காலையிலும் நடைபெறும். (அ-30)

* * *

நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று காலை 9 மணிக்கும், தீர்த்தத் திருவிழா மறுநாள் புதன்கிழமை காலை 10 மணிக்கும் நடைபெறும். (அ-130)

* * *

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதி அரசடி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் கடைசி நாளான இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெறும் மாலையில் திருவூஞ்சலும், பெருமான் வீதிவலம் வருதலும் இடம் பெறும். (அ)

## விற்பனைக்கு வந்துவிட்டது

போட்டிப் பரீட்சைகளுக்கான வழிகாட்டி விளக்க நூல்

**'பொது அறிவு'**

★ அண்மைக்கால இலங்கை சர்வதேச நடைமுறை விடயங்கள்.
★ பல்துறைசார்தகவல்கள் அத்தியாயங்களாக
★ 2 மாதிரி வினாத்தாள்- விடைகளுடன்.

ஆசிரியர்:
வே. தபேந்திரன் B. Com

● எல்லா பிரபல புத்தக சாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

(42258)

## காணவில்லை

சங்கானத்தையைச் சேர்ந்த
**இராசையா பாலசுப்பிரமணியம்**

வயது 32, உயரம் 5' 7'', பொதுநிறம் கொண்ட எனது மகன் 12.08.96. இல் திருநெல்வேலியிலுள்ள என் சகோதரி வீட்டிற்குப் போய் மாலை 5 மணியளவில் அவர் வீட்டிலிருந்து புறப்பட்டவர் இதுவரை வீடு வந்து சேரவில்லை. அவர் மனநோயால் பாதிக்கப்பட்டவர். அவர் பற்றிய தகவல் அறிந்தவர்கள் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

தகவல்:
**இ. தேவநாயகி**
(தாய்)

ஆ. ஸ்ரீஸ்கந்தராசா
(உரிமையாளர், காந்தா சோடா பக்டரி)
மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(42422)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சீதாதேவி வேலாயுதம்

கொக்குவில் மணியகாரன் ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி சீதாதேவி வேலாயுதம் 23 - 08 - 96 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார். இவர் காலஞ்சென்ற செல்லையா வேலாயுதம் [ஓய்வுபெற்ற பிரதம சிறாப்பர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) அவர்களின் அன்பு மனைவியும், யுவராஜன், ஜெயந்தி, சாந்தி, லிங்கராஜன் (பிரான்ஸ்), ஆனந்தி, வேல்ராஜன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பவானி, லக்ஷ்மன் திசா, ஜெகதீஸ்வரன் (கொமேர்சல் வங்கி, கொழும்பு), மரீஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வாணி றேமண்ஸ் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 25 - 08 - 1996 ஞாயிறு பி. ப. 3.00 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை அறியத் தருகிறோம். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**வே. யுவராஜன் (மகன்)**

மணியகாரன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

(42260)

### கனகசபை கதிர்காமநாதன்

சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலியைச் சேர்ந்த கனகசபை கதிர்காமநாதன் 25-08-96 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற வே. கனகசபை (முன்னைநாள் அதிபர், புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி)—திருமதி கனகசபை தில்லைநாயகம் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு மகனும், திருமதி உருக்குமணிதேவி கனகராசா (இங்கிலாந்து), லோகநாதன் (இங்கிலாந்து), ஞானசகுந்தலா தவநாயகம் ஆகியோரின் அன்புச்சகோதரனும் சு. கனகராசா (கயானா), Dr. அருந்ததி (இங்கிலாந்து), சிவசக்தி (இங்கிலாந்து), தவநாயகம் (சனசமூக அபிவிருத்திஉத்தியோகத்தர், பிரதேசசெயலகம், கோப்பாய்) ஆகியோரின் மைத்துனரும், மஞ்சுளா, கணேசலிங்கம் (இங்கிலாந்து), அருட்கணேசன் (இங்கிலாந்து), பாஸ்கரன் (இங்கிலாந்து), லட்சுமி (இங்கிலாந்து), தமிழ்நிலவன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (26-08-96) திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் சிறுப்பிட்டி குடும்ப மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. சிவகுமாரன்

சிறுப்பிட்டி மத்தி,
நீர்வேலி

(42418)

### செல்லத்தம்பி துரைசிங்கம்

கரம்பன், ஊர்காவற்றுறையைச் சேர்ந்த, திரு. செல்லத்தம்பி துரைசிங்கம் அவர்கள் 21 - 08 - 96 அன்று மன்னாரில் காலமானார்.

அன்னார் மேரி மெக்டலின் அவர்களின் அன்பு மனைவியும், அலோசியஸ் பத்திநாதன் (C. T. B மன்னார்), பத்மினி (மிருசுவில்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேஸ்வரி (ஆசிரியை, மன்னார்), அல்பிரட் யோகம் (யோகம்ஸ் அரிசி ஆலை, மிருசுவில்) ஆகியோரின் அன்பு மாமனாரும், டண்ஸ்ரன், நிதர்சினி, றஜேன், தர்சினி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 22 - 08 - 96 இல் மன்னாரில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் தயவுடன் ஏற்றுக் கொள்ளவும்;

தகவல்;
அ. அல்பிரட் யோகம்,
(யோகம்ஸ் அரிசி ஆலை, மிருசுவில்)
115, 3ஆம் குறுக்குத்தெரு.
யாழ்ப்பாணம்.

(42423)

## தென் கொரியாவின்

# முன்னாள் ஜனாதிபதிக்கு மரண தண்டனை விதிப்பு

சோல், ஓக. 27

தென்கொரிய முன்னாள் ஜனாதிபதி சண்டுகுவானுக்கு நீதிமன்றம் மரண தண்டனை வழங்கி உள்ளது.

1979, 1980ஆம் ஆண்டுகளில் இராணுவம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது தொடர்பாக சண்டு குவான் மீது நீதிமன்றத்தில் பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன. இராணுவச் சதிக்கு திட்டமிட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அவரது முன்னாள் சக இராணுவ அதிகாரியும் பின்னர் ஜனாதிபதியாக பதவி ஏற்றவருமான நோட்டே ஊ என்பவருக்கு எவரும் எதிர்பார்க்காதவிதத்தில் குறைந்த தண்டனையாக 22 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

சண்டு குவான் நாட்டுக்கு ஆற்றிய பணிகள் தலைமை நீதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. இவரது காலத்திலேயே தென் கொரியா ஐ. நாவில் அங்கத்துவம் பெற்றது.

சண்டு குவானுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறைவேற்றுவதற்கு பொது மக்களின் ஒப்புதலைப் பெற வேண்டியுள்ளது எனவும் —

1980இல் பேரணியில் சென்ற பலர் மீது மேற்கொள்ளப்பட்ட மனிதப்படுகொலைகள் தொடர்பான குற்றச்சாட்டிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது ஒரு அரசியல் பழிவாங்கல் என 3 முன்னைநாள் ஜனாதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த வழக்கை முன்னைநாள் ஜெனரல்கள் அடங்கிய நீதிமன்றம் விசாரணை செய்தது. விசாரணையின் இறுதி வாரத்தின்போது அரசவாதி தரப்பு வழக்கறிஞர்கள் நீதிமன்றுக்கு சமுகமளிக்கவில்லை.

(இ-10)

## இஸ்லாமிய கூலிப்படை காஷ்மீருக்குள் ஊடுருவல்

### இந்தியா குற்றச்சாட்டு

ஸ்ரீநகர் ஓக. 27

காஷ்மீர் சட்டசபைத் தேர்தலைக் குழப்பும் நோக்கத்துடன் இஸ்லாமிய கூலிப்படைகளை பாகிஸ்தான் காஷ்மீருக்குள் அனுப்பி உள்ளது. எந்தவித அச்சுறுத்தல்கள் இருந்தாலும் தேர்தலை நடத்தியே தீருவோம்.

இந்திய உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூலிப்படைகளை காஷ்மீருக்குள் அனுப்பும் நோக்கத்துடன், அவர்களுக்கு வழி ஏற்படுத்திக் கொடுப்பதற்காக பாகிஸ்தான் படைகள், இந்திய படைகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் அவர் கூறினார்.

## சார்ள்ஸ் - டயானா விவாகரத்து அறிவிப்பு

### நாளை வெளிவரும்

லண்டன், ஓக. 27

இளவரசர் சார்ள்ஸ் — இளவரசி டயானா விவாகரத்து நாளை புதன்கிழமை அதிகார பூர்வமாக அறிவிக்கப்படும்.

நட்ட ஈடாக டயானாவுக்கு சுமார் 10 ஆயிரம் இலட்சம் இந்திய ரூபா மதிப்புடைய ஸ்ரேலிங் பவுண்டுகள் வழங்கப்படுகின்றன.

இளவரசர் சார்ள்ஸ் இந்த விவாகரத்தின் பின் கமிலா பாக்கரை முறைப்படி திருமணம் செய்து கொள்வார் என வதந்திகள் உலாவுகின்றன.

இங்கிலாந்து மக்கள் கமின்லா பாக்கரை ஒருக்காலும் இளவரசியாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என பத்திரிகைகள் எழுதியுள்ளன. அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் ஜோண் ரேய்லர் கூறுகையில், கமின்லா பாக்கர் இளவரசி என்பதை மக்கள் சகித்துக்கொள்ளவே மாட்டார்கள் என்றார்.

[இ- 4]

## 20 சட்டமன்றஉறுப்பினர்கள் பாகிஸ்தானில் ராஜினாமா

### பெனாசிருக்கு எதிர்ப்பு

பாகிஸ்தானில் பிரதமர் திருமதி பெனாசிர் பூட்டோவுக்கு எதிராக நடைபெற்ற மாபெரும் பேரணியின்போது, 20 வடமேற்கு எல்லை மாகாணங்களின் சட்டமன்ற உறுப்பினர்களும் அவாமி தேசிய கட்சியின் 8 உறுப்பினர்களும் தாங்கள் பதவி விலகுவதாக அறிவித்தனர்.

பெஷாவரில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாபெரும் பேரணியின் போது இவ்வாறு அறிவிக்கப்பட்டது.

பெனாசிர் பூட்டோ அரசுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட நாடு தழுவிய எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபட்டுள்ள 15 எதிர்க் கட்சிகள் இந்த பேரணிக்கு ஏற்பாடு செய்தன.

பாகிஸ்தான் முஸ்லிம் லீக் தலைவர் நவாப் ஷெரீப் இந்த எதிர்க்கட்சி முன்னணிக்கு தலைமை வகிக்கிறார்.

பேரணியில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களின் அரச எதிர்ப்பு கோஷங்களிடையே இந்த பதவி விலகல் கடிதங்கள் வழங்கப்பட்டன.

பெனாசிர் பூட்டோவின் அரசு நீடிப்பதை எதிர்த்தே இந்த பதவி விலகல் கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

(இ 4)

# உலக அரங்கில்

## அணு ஆயுத நாடாக மாறும் நோக்கங் கிடையாது

### இந்திய அமைச்சர் தெரிவிப்பு

அணு ஆயுத நாடாக மாறுவதோ அல்லது பிராந்தியத்தில் அணு ஆயுதப் போட்டியில் ஈடுபடுவதோ இந்தியாவின் நோக்கம் அல்ல.

இந்தியாவின் வெளி விவகார அமைச்சர் இண்டர் குமார் குஜ்ரால் புதுடில்லியில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்

ஜெனிவாவில் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான அணுஆயுதத் தடை நகல் ஒப்பந்தத்தை இந்தியா தனது வீட்டோ அதிகாரம் மூலம் தடுத்துள்ளது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

1974 ஆம் ஆண்டு இந்தியா தனது அணு ஆயுத திறனை வெளிக்காட்டி இருந்தது.

எனினும் அணு ஆயுத நாடுகள், அவற்றை அழிக்காமல் தமது பாதுகாப்புக்கருதி தொடர்ந்து வைத்திருக்கும் வரை இந்தியா இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடாது என்றும்அவர் கூறினார்.

## புறூண்டியில் 6 ஆயிரம் பேர் கொலை

கடந்த ஜூலை 25 ஆம் திகதிய புரட்சியின் பின்னர் புறூண்டியில் ஆறாயிரம் மக்கள் கொல்லப்பட்டிருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை குற்றஞ்சாட்டி உள்ளது.

# முல்லைத்தீவு தாக்குதலை அடுத்து வீடு செல்லவுள்ள ஜெனரல் யார்?

முல்லைத்தீவு தாக்குதல் தொடர்பாக ''சமுராயி'' என்பவரால் எழுதப்பட்டு ''லக்பிம'' சிங்கள வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தைப் பறிகொடுத்ததை ஒரு தற்காலிக பின்னடைவாக மாற்றிய விடுதலைப் புலிகள், தமது போர் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய மேற்கொண்ட முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதலின் மூலம் மீண்டும் ஒரு வெற்றிப் பாதையை அமைத்துக் கொண்டனர்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதை நிரந்தர வெற்றியெனக் கருதிய அரச பாதுகாப்புப் படையினர், அரசியல் நிகழ்ச்சி நிரலுக்குஅமைய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளப்போய் முல்லைத்தீவு முகாமைப் பறிகொடுக்கும் அளவிற்கு பின்னடைவுகளைச் சந்தித்தனர்.

முல்லைத்தீவு முகாம் மீது புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை ஏற்றுக்கொள்ளத் தைரியமில்லாமல் குழம்பிப்போன அரசும் ஒரு சில இராணுவத் தலைவர்களும் தங்கள் இயலாமையை மறைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

யுத்தம் தொடர்பான உண்மை நிலையை வெளியிட்ட பத்திரிகையாளர்கள் மீது குற்றத்தைச் சுமத்தி, எல்லாப் பொறுப்புக்களில் இருந்தும் விடுபட அவர்கள் முயற்சிக்கின்றனர். எனினும் இளைய அதிகாரிகளும், சிப்பாய்களும் உண்மை நிலையை அறிவர்.

தணிக்கை என்ற போர்வையில், யுத்தத்தின் உண்மை நிலையை பொது மக்களுக்கு மறைப்பதற்காக அரசு முயன்ற போதிலும், போர்க்களத்திலிருந்த சிப்பாய்கள் அனைத்தையும் அறிந்திருந்தனர்.

போர்க்களத்தில் எதிரியை நோக்கி முன்னேறிச் சென்று நேருக்கு நேர் சண்டையிட்டு எதிரியை அழிப்பது சிப்பாய்களும் கப்டன் பதவிக்குட்பட்ட அதிகாரிகளுமே ஆவர்.

அங்கு எதிரியின் தாக்குதலுக்கு உட்பட்டு பெருமளவில் உயிர் துறப்பதும் அவர்களே யாகும்.

பல சந்தர்ப்பங்களில், மூத்த அதிகாரிகள் யுத்தத்தை நெறிப்படுத்துவது இளைய அதிகாரிகளுக்கும் சிப்பாய்களுக்கும் பின் புறத்திலிருந்தே என்பது வெளிப்படை.

### உயர் அதிகாரிகள் எங்கே?

எதிரி தீரத்துடன் நேருக்கு நேர் மோதும் சண்டைகளில் நிலைமை மேற்கண்டவாறு இருப்பினும், எதிரி தந்திரோபாயமாக பின்வாங்கும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் மூத்த அதிகாரிகள் முன்னணிக்கு வந்த சந்தர்ப்பங்களும் உள்ளன.

இதற்கு உதாரணமாக யாழ்ப்பாணம் மீதானமற்றும் கிளிநொச்சி மீதான நடவடிக்கைகளைக் காட்டமுடியும்

குடாநாட்டில் நடத்தப்பட்ட சூரியப் பிரகாசம் 1, 2, 3, இராணுவ நடவடிக்கைகள் வன்னியில் மேற்கொள்ளப்படும் உண்மை வெற்றி இராணுவ நடவடிக்கைகள் அனைத்திலும் பங்குபற்றிய ''கொமாண்டோ'' படைப் பிரிவைச் சேர்ந்த கப்டன் ஒருவர் ''எதிரி இராணுவத்தை நேருக்கு நேர் சந்திக்காமல் பின்வாங்கிய'' யாழ்ப்பாணம் மீதான இராணுவநடவடிக்கைகளின்போது வீடியோ கமெராவுக்கு முன் தோன்றி போர்க்களத்தின் முன்னணிக்குச்சென்ற ஜெனரல்கள்,பிரிகேடியர்கள்,கேணல்கள்ஆகியோரை ''கிளிநொச்சி மீதான நடவடிக்கையின் போது காண முடியவில்லை.'' என்றார்.

முல்லைத்தீவு முகாமிலிருந்து கைப்பற்றிய பீரங்கிகள் மற்றும் ஏனைய ஆயுதங்களைப் பயன்படுத்தி கிளிநொச்சி மீதான இராணுவ நடவடிக்கையின் போது இராணுவத்தின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு விடுதலைப் புலிகள் அதி உச்ச முயற்சிகளை மேற்கொண்டனர் என அந்தக் கப்டன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியை படையினர் கைப்பற்றாமல் தடுப்பதற்காக விடுதலைப்புலிகள் அவ்வாறான உக்கிரத் தாக்குதலை மேற்கொண்ட வேளையில், மேலே குறிப்பிட்ட மூத்த அதிகாரிகள் எவரும் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட 'சூரியபிரகாசம்' நடவடிக்கையின் போது களத்தின் முன்னணிக்குச் சென்றது போல் அங்கு வரவில்லை. கீழ்த்தரத்தைச் சேர்ந்த படையினர் மட்டுமே தங்களுக்குத் தெரிந்தவிதத்தில் போரிட்டனர். அவர்களுக்கு கட்டளைகளை வழங்கி வழிநடத்த மூத்த அதிகாரிகள் (ஜெனரல்கள், பிரிகேடியர்கள்) எவரும் இருக்கவில்லை.

### புலிகள் கைப்பற்றிய பீரங்கிகள்

முல்லைத்தீவுத் தாக்குதலின் போது அந்த முகாமில் இருந்த இரு பீரங்கிகள் விடுதலைப்புலிகளிடம் சிக்கின என கடந்த ஞாயிற்றுக்கிழமை தேசிய பத்திரிகைகள் இரண்டிற்கு விடுத்த அறிக்கையில் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்கா கூட ஒப்புக்கொண்டுள்ளார்.

அவ்வாறெனில், அந்தப் பீரங்கிகளின் தாக்குதல்கள் காரணமாக, கிளிநொச்சி மீதான இராணுவ நடவடிக்கையின் போது படையணிகள் முன்னேற முடியாமல் மீண்டும்பரந்தனுக்குப்பின்வாங்கிப் போனதுடன் நடவடிக்கையும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது பற்றி பொதுசனத் தொடர்பு சாதனங்களுக்கு பிரிகேடியர் சரத் முனசிங்காவினால் ஏன் வெளிப்படுத்த முடியவில்லை என அந்தக் கப்டன் கேள்வி எழுப்புகிறார்.

### உண்மைகளை மறைப்பது கடமையா?

இராணுவப் பேச்சாளர் யுத்தம் தொடர்பான உண்மைகளை மக்களுக்குத் தெரிவிக்காமல் மறைப்பது அவரது கடமையின் ஓர் அங்கமாக இருக்க வேண்டும்.

இராணுவத்தில் உயர் பதவிகளில் உள்ளவர்கள் அரசியல்வாதிகளைத் திருப்திப்படுத்தி அவர்களைத் தம்வசமாக்கிக் கொள்வதற்காக யுத்தத்தைப் பொய்யாக மேற்கொள்ளும் போது இராணுவப் பேச்சாளர் அந்தப் பொய்யை உண்மையென உலகுக்கு எடுத்துக் கூறவேண்டும். அவருக்குக் கொடுக்கப்பட்ட கடமை அதுவே.

எனினும் போர் தொடர்பான செய்திகளை தணிக்கை என்ற பெயரில் அவர் மக்களுக்கு எப்படித் தெரிவித்தாலும் போரில் ஈடுபட்டுள்ள

(5 ஆம் பக்கம் பார்க்க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தேவை

யாழ். நகர மத்திய பகுதியில் 1500 சதுர அடிக்கு குறையாத விஸ்தீரணமுடையகளஞ்சிய வசதி கொண்ட கட்டடம் உடனடியாக தேவை. தொடர்பு: சரவணாஸ் அச்சகம், 233, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (42405)

## தவறிவிட்டது

எனது 571083841 Vஇலக்க அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல. 39, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். என்ற விலாசத்தில் கையளிக்கவும்: — நடராஜா சண்முகநாதன். (42410)

## பாலர் ஆசிரியராக

பாலர் ஆசிரியர் பயிற்சி தபால் வழியில் நடைபெறுகிறது. க.பொ. த. (சா.த.) கடைசித் தகைமையாகும். உடன் விண்ணப்பிக்குக. பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா. திரு. வீ. கே. கந்தசாமி, ''பழமுதிர்சோலை'', 20, அச்சக ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (42277)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சென் ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றுக்கு அண்மையில் 3 பரப்பு காணியில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய மாடிவீடு விற்பனைக்குள்ளது. திணைக்களங்கள், அரசு சார்பற்ற நிறுவனங்கள், பல்கலைக்கழக விடுதிகள் அமைப்பதற்குப் பொருத்தமானது. தொடர்பு: பா. தவபாலன் சட்டத்தரணி, இல 82/5 நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர். (42397)

## தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்கு உகந்த தென்னம் நாற்றுக்கள் (பல இனங்கள்) விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விஷேட கழிவு உண்டு. மு. காங்கேசு, ஐயா கடையடி, கண்டிவீதி, மீசாலை (42285)

## காணவில்லை

அல்ஷேசன் (கறுப்பு), பொமரேனியன் (கறுப்பு) நிற நாய்களை காணவில்லை. கண்டவர்கள் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். பொ. சிங்கம் 59, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (42414)

## புத்தகப் பிரியர்களே!

தரமான தமிழ் - ஆங்கில நூல்களை இரவல் பெற்று வாசித்து மகிழ விஜயம் செய்யுங்கள், லிங் லெண்டிங் லைப்ரறி Ling Lending Library, 41, தபாலக வீதி, சாவகச்சேரி. (42413)

## கணித வகுப்புகள்

A/L 98, ஆண்டு 11, ஆண்டு 10 ஆகியவற்றுக்கான கணித வகுப்புக்கள். தொடர்பு: ஆசிரியர் இல. 108, பிறவுண் வீதி, நீராவியடிப் பிள்ளையார் கோவிலருகில் கிராம சேவகர் பணிமனை முன்பாக, அனுமதிபெற விரும்புவோர் தினமும் பழைய நேரப்படி பி. ப. 3.00 மணிக்குப் பின் தொடர்பு கொள்க. (42416)

## பிரத்தியேக வகுப்பு

வர்த்தகம் (O/L), கணக்கியல் (A/L) ஆகிய பாடங்கள் சிறந்த முறையில் கற்பிக்கப்படுகின்றன. தொடர்பு:- ஆசிரியர் இல:- 168, கோவில் வீதி, நல்லூர் (கந்தன் கருணைக்கு அருகாமை) புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன. (42417)

---

## அலுவலகப் பியோன் தேவை

அலுவலகப் பியோன் தேவை. சுயவிண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

கிளீன் கட்,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

(சி-2798)

---

## யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம் - வரையுள்ளது

# அறிவித்தல்

அங்கத்தவராகச் சேர விரும்புவோர் ரூபா 100/- பங்குப்பணமாகச் செலுத்தி வாக்காளராகும் தகுதியைப் பெறுங்கள். இத்தொகைக்கு குறைவான அங்கத்துவப் பணத்தைக் கொண்டுள்ளவர்கள் மிகுதிப் பணத்தைச் செலுத்தி முழுமையான அங்கத்தவராகி வாக்காளர் இடாப்பில் இடம் பெறுங்கள்.

பொது முகாமையாளர்.

24- 08- 1996 (சி- 2801)

---

# சேது களஞ்சியம்

## மிதிவண்டி, அதன்உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையம்

எமது ஸ்தாபனம்மீண்டும் அதே இடத்தில் இலக்கம் 356, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகிறது என்பதை எமது வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகிறோம்.

எங்களிடம்

புதிய லுமாலா, ஏசியா ஆண்கள், பெண்கள் மிதிவண்டிகள்

மற்றும்

மிதிவண்டி உதிரிப்பாகங்கள்

என்பவற்றை மலிவான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

இலக்கம் 356, கே.கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம். (42411)

---



# லாவண்யா

## பல் மூக்குக் கண்ணாடி அகம்

செவ்வாய், வியாழன், சனி
காலை 8-30 மணிமுதல் பகல் 12-30 மணிவரை

யாழ். வீதி, நெல்லியடி.
(மகாத்மா தியேட்டர் அருகாமை)

சிறந்த முறையில் பல் கட்டுபவர், கண் பரிசோதித்து கண்ணாடி கொடுப்பவர். இன்றே நாடுங்கள்:


Dr. றெஜி சொலமன்
நெல்லியடி, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/2735)

---

## நீங்கா நினைவில் 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 20-06-1947



மறைவு: 28-07-1996

## செல்லர் செல்லையா (துரை)

(நாவலடி, அரியாலை)

எமது அன்புச் சகோதரரின் பிரிவால் துயருறும் நாங்கள், அவரின் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என இறைவனை வேண்டுகின்றோம்.

தங்கருபன் குடும்பத்தினர் (அரியாலை),
பவளக்கொடி குடும்பத்தினர் (கோண்டாவில்),
குழந்தைவேலு (சின்னராசா) குடும்பத்தினர் (மயிலங்காடு), கனகலிங்கம் குடும்பத்தினர் (கோண்டாவில்), வெள்ளையர் குடும்பத்தினர் (கோண்டாவில்).

தகவல்: க. தங்கருபன்,
நாவலடி, அரியாலை. (சி-2800)

---

## தொடர்பு கொள்க

ரேஸ்ட்லைன் நிறுவனத்தின் விற்பனைப் பிரதிநிதி

### T. வசந்தகுமார்

உடனடியாக கீழ்வரும் முகவரிக்கு வரவும்.

டாக்டர் பத்மநாதன் (இடம்பெயர்ந்தவர்)
பழங்கிணற்றடி பிள்ளையார் கோவிலடி,
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

(42424)

---

# லங்கெம் முகவர் நிலையம் ஆரம்பம்

புதன்கிழமை 28-08-96 அன்று லங்கெத்தின் விவசாய இரசாயனப் பொருள் விற்பனை நிலையம் —

இலக்கம் 91, ஸ்ரான்லி வீதியில், ஆரம்பிக்கப்படுகிறது.

உங்களுக்குத் தேவையான விவசாய — இரசாயனப் பொருள்களை இதில் பெற்றுக் கொள்ள முடியும்.

[42421]

---

# கேள்வி அறிவித்தல்

கல்வித்திணைக்களம் - யாழ்ப்பாணம்,

யாழ். பிரதேச கல்வித்திணைக்களத்திற்குத் தேவையான அலுவலக, பாடசாலை மரத்தளபாடங்கள், உருக்குத் தளபாடங்கள் வழங்கலும், விநியோகமும் - 1996

யாழ். கல்வித்திணைக்களத்திற்கும் அதன் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் கோட்டக்கல்வி அலுவலகங்கள், பாடசாலைகள் ஆகியவற்றிற்குத் தேவையான கீழ்க்காணப்படும் தளபாடங்களை வழங்குவதற்கும், விநியோகிப்பதற்கும் முத்திரையிடப்பட்ட கேள்விகள் தளபாட உற்பத்தியாளர்கள், விநியோகத்தர்களிடமிருந்து 1996 - 09 - 16 ஆம் திகதி காலை 11-00 மணி வரை யாழ். கல்வித்திணைக்கள கேள்விச் சபைத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

02. கேள்விகள் இத்திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட கேள்விப்படிவத்தில் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு இத்திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டிக்குள் கேள்வி முடிவு நேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் ''அலுவலக பாடசாலைத் தளபாடங்கள் வழங்குவதற்கும் விநியோகிப்பதற்குமான கேள்விகள்'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். 16 - 09 - 96 அன்று கேள்வி முடிவு நேரத்திற்குப்பின்னர் கேள்விகள் திறக்கப்படும். அச்சமயம் கேள்வியாளர்கள் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

03. கேள்விப்படிவங்கள், நிபந்தனைகள், மாதிரிப் படங்கள் ஆகியவற்றை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக, ரூ 750 மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாக ரூபா 30, 000/- ஆக மொத்தம் 30,750/-க்கு வங்கிக் கட்டளையைச் சமர்ப்பித்து உரிய பற்றுச் சீட்டுக்களைப் பெற்று 1996- 09 - 09 ஆம் திகதி காலை 11 - 00 மணிக்கு முன்னர் இத் திணைக்களக் கணக்காளரிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

தேவையான தளபாடங்கள்

01. அலுவலக மேசை பெரியது
02. அலுவலக மேசை சிறியது
03. கைப்பிடிக்கதிரை
04. மாநாட்டறை மேசை (பெரியது)
05. மாநாட்டறை மேசை (சிறியது)
06. உருக்குக் கோவை தாங்கி
07. கடதாசி கனதி
08. அலுவலகத்தட்டு (றே)
09. சாதாரண மேசை
10. சாதாரண கதிரை
11. கரும்பலகை தாங்கியுடன்
12. நூலகக் கதிரை
13. ஆய்வுகூட இருக்கை [ஸ்ரூல்]
14. நீள மேசை
15. நீள வாங்கு
16. மாணவர் உருக்கு மேசை 'ஏ'
17. மாணவர் உருக்கு கதிரை 'ஏ'
18. மாணவர் உருக்கு மேசை (பி)
19. மாணவர் உருக்கு கதிரை (பி)
20. மாணவர் உருக்கு மேசை (சி)
21. மாணவர் உருக்கு கதிரை (சி)

வங்கிக்கட்டளையை கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம் என்ற பெயருக்குப் பெற்று அனுப்ப வேண்டும்.

இ. சிவானந்தன்,
கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
1996 - 08 - 22. [சி- 2797]

உதயன்

## புதுப் பிரச்சினையா?

அடுத்த வருடத்துக்கான அரசாங்க விடுமுறை நாள்கள் குறைக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் இந்து சமய மக்களுக்கு மிகவும் முக்கிய நாளான சிவராத்திரியும், இஸ்லாமிய மக்களுக்கு மிக முக்கிய நாளான ஹஜ் தினமும் விடுமுறைகள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

அதிக அரசாங்க விடுமுறை நாள்களைக் கொண்ட நாடுகளில் ஸ்ரீலங்காவும் ஒன்று என்பது உண்மைதான். நாட்டின் உற்பத்தியையும் மக்களின் வேலைத்திறனையும் உயர்த்துவதற்கு அரசாங்க விடுமுறை நாள்கள் குறைக்கப்படவேண்டிய தேவை குறித்து நீண்டகாலமாகவே பேசப்பட்டு வந்தது.

ஆகையால், அரசின் விடுமுறை நாள் குறைப்புத் திட்டம் காலத்தின் தேவையாக அமைவதை வரவேற்கலாம்.

ஆனால் சிறுபான்மை மக்கள் இரு சாரரினதும் முக்கிய சமய நாள்களில் கை வைத்தது கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

இந்துக்களுக்கு சிவராத்திரியும், இஸ்லாமியருக்கு ஹஜ்ஜுப் பெருநாளும் பௌத்தர்களின் வெசாக தினத்துக்கு ஒப்பானவை. நீண்ட காலமாக அரசாங்க விடுமுறைத் தினங்களாக இருந்த சிவராத்திரியையும், ஹஜ்ஜுப் பெருநாளையும் இப்போது ரத்துச் செய்வது இரு சமயங்களையும் சேர்ந்த மக்களின் மனங்களைப் புண்படுத்துவதாகும்.

நாட்டில் சமாதானத்தையும் பல இன, பல மத, மக்களிடையே ஒற்றுமையையும் வளர்க்க வேண்டும் என்று அரசாங்கம் அடிக்கடி கூறி வருகிறது. ஆனால் செயலளவில் சிறுபான்மையினருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட சில சலுகைகளை, வசதிகளை, உரிமைகளைப் பறிக்க முயல்வது பேச்சுக்கு எதிர்மாறாக உள்ளது.

இது தமிழர், முஸ்லிம் மக்களின் வழிபாட்டுச் சுதந்திரத்துக்குப் பெரும் குந்தகம் விளைவிப்பதாகும். தமிழ், முஸ்லிம் மக்களின் மனதை வென்றெடுப்பதற்கு அரசு பாடுபடுவதாகக் கூறப்படுவது இத்தகைய நடவடிக்கைகளால் அர்த்தமற்றதாகிவிடுகிறது.

சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடு இருக்கும் போது விளைவு அல்லது பெறுபேறு நினைப்பதற்கு எதிரான பலாபலனையே தரும். இதனை அரசு நன்கு உணர வேண்டும்.

ஹஜ்ஜுப் பெருநாளை விடுமுறையிலிருந்து ரத்துச் செய்ததை ஆட்சேபித்து இஸ்லாமிய மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். மக்களின் சமய உணர்வுகள் மிகவும் மெல்லியதானவை. அவர்களது உணர்ச்சிகளைப் பொங்கச் செய்து வன்செயல்களுக்குக் கூட வழிவகுக்கக் கூடியவை என்பதை இஸ்லாமிய மக்களின் ஆர்ப்பாட்டத்திலிருந்து அரசுபுரிந்துகொள்ள வேண்டும்.

பாதுகாப்புக் காரணங்கள் என்ற பட்டியுடன் வடக்கு கிழக்குப் பகுதிகளில் இந்துக்களின் வழிபாட்டுச் சுதந்திரம் மறுக்கப்படுவதும் இத்தருணத்தில் சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்றாகும்.

இத்தகைய போக்குகள், இனப் பிரச்சினைக்கு மேலதிகமாக, சமயப் பிரச்சினையையும் தோற்றுவிக்கும். இது விடயத்தில் அரசு எச்சரிக்கையுடனும் விவேகத்துடனும் நியாயத்துடனும் செயற்பட வேண்டும். இல்லையேல் இன்னொரு தேசியத் தலையிடியை விலைக்கு வாங்குவதாகவே முடியும்.

# அரச ஊழியர்களுக்கு அலவன்ஸ் வழங்கப் போதிய பணம் இல்லை

## வடக்கு-கிழக்கு மாகாணசபை திண்டாட்டம்

திருகோணமலை ஒக. 27

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் எட்டு மாவட்டங்களில் பணிபுரியும் அரச ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு அலவன்ஸ் வழங்குவதற்காக இந்த ஆண்டு அந்த மாகாண சபைக்கு 27கோடி 30இலட்சம் ரூபா தேவைப்படுகின்றது.

அரசாங்க நன்கொடைகளில் தான் வடக்கு – கிழக்கு மாகாணசபை இயங்கி வருகிறது.

ஊக்குவிப்பு அலவன்ஸை வழங்குவதற்குத் தேவையான இவ்வளவு பெருந்தொகைப் பணத்துக்கு எங்கே போவது என்று திணறிக் கொண்டிருக்கிறது மாகாண நிர்வாகம்.

இப்பணத்தை தந்துவுதமாறு மாகாண சபையின் பிரதம செயலாளர், ஆளுநர் மூலம் அவசரக் கோரிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார்.

கடந்த ஆண்டு ஏப்ரல் தொடக்கம் டிசம்பர் வரையான காலத்துக்கும் வடக்கு-கிழக்கு ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு அலவன்ஸ் வழங்கப்படவில்லை. இதற்கு 18 கோடி ரூபா தேவைப்படுகிறது.

இதனிடையில், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சகல பிரதேச செயலர் பிரிவு ஊழியர்களும் திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த சகல பிரதேச செயலர் பிரிவு ஊழியர்களும் ஊக்குவிப்பு அலவன்ஸ் பெறும் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதே வேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 பிரதேச செயலர் பிரிவுகள் இத்திட்டத்திலிருந்து விலக்கப்பட்டிருக்கின்றன.

அப்பிரிவுகள் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இல்லாததே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-150)

## ஐ. நா. குழு யாழ். வரும்

யாழ்ப்பாணம், ஒக. 27

ஐ. நா உலக விவசாய அபிவிருத்தி திட்ட (எவ்.ஏ.ஓ) அமைப்பின் அதிகாரிகள் குழு ஒன்று அடுத்த மாத முற்பகுதியில் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றது.

யாழ். மாவட்டத்தில் விவசாய அபிவிருத்தி வேலைகளை இக் குழு பார்வையிடும்.

திருகோணமலையில் இருந்து செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு வந்து சேரவிருக்கும் இந்த அதிகாரிகள் குழு விவசாய நடவடிக்கைகளைப் பார்வையிட்ட பின்னர் கொழும்பு திரும்பும். (இ-3)

## இதுவுமுன் திருவுளமோ?

பட்டதுவும் கெட்டதுவும் பசலிரவாய்
நாங்கள் பயன் பெருக்கி!
நட்டதுவும் தொட்டதுவும் நலிந்தனவே!
நலமே பெறஎண்ணி
இட்டதுவும் எல்லாம் இழந்தனமே!
இதுவுமுன் திருவுளமோ?
தொட்டருள்வாய் நல்லூர்த் தூயவனே
அடியோம் அடைக்கலமே!

— முருகனடியான்

நல்லூர் உற்சவ கால சிறப்பம்சம்

## நல்லைக் குமரன் மலர் வெளியீடு

''நல்லைக் குமரன்'' மலர் வெளியீடு எதிர்வரும் செப்டெம்பர் இரண்டாம் திகதி, நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் முற்பகல் 9 மணிக்கு நடைபெறும் மலர் வெளியீட்டு விழாவுக்கு யாழ்மாநகர சபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தலைமை வகிப்பார்.

இம்மலர் வெளியீட்டு விழா நேற்று 26 ஆம் திகதி நடைபெறுவதாக இருந்து ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நல்லூர்க் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தின் போது, மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழு ''நல்லைக் குமரன்'' மலரை வருடாந்தம் வெளியிட்டு வருகிறது. (அ-30)

முல்லைத்தீவில் . . .
(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளும், சிப்பாய்களும் உண்மை நிலையை அறிவர்.

எனவே அந்த அதிகாரிகளும், சிப்பாய்களும் விடுமுறையில் தமது ஊர்களுக்குச் செல்லும் போது உண்மை நிலைமையை தமது நெருங்கிய நண்பர்களுக்குக் கூறுவர். அப்போது அரசாங்கத்தினதும் இராணுவத்திலுள்ள முக்கியத்தர்களினதும் தேவைக்கேற்ப இராணுவப் பேச்சாளர் வெளியிடும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என்பதை பலர் அறியும் வாய்ப்பை எந்தவிதத்திலும் தவிர்க்க முடியாது.

### அரசியல் ஆதாயம் முக்கிய குறிக்கோள்

உண்மையில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் தேவையிலும் பார்க்க அரசியல் ஆதாயத்தைக் குறி இலக்காகக் கொண்டு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற அரசு தீர்மானித்தபோது வடக்கு—கிழக்கு ஒன்றிணைந்த நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருந்தவர் மேஜர் ஜெனரல் எ. எம். யு. செனெவிரத்ன ஆவார் — அவர் தற்போது இராணுவத் தலைமையகத்தில் தலைமை நிலை அதிகாரியாக (Chief of Staff) பணியாற்றுகிறார். அதாவது இராணுவத் தளபதிக்கு அடுத்த நிலையில் உள்ளார். இவ்வாண்டு முடிவில் இவர் இளைப்பாறவுள்ளார்.

அன்று யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற வேண்டும் என பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்த (அப்போது கேணல்) இராணுவ அதிகாரிகளுக்குத் தெரிவித்தபோது அது இப்போது முடியாத ஒன்று என நேரடியாகத் தெரிவித்தவர் மேஜர் ஜெனரல் செனெவிரத்ன.

(மிகுதி நாளை)

# தீராப்பிணி தீர்க்கும் சந்நிதிக் கந்தன்

கோயில்களில் ''சந்நிதி'' உண்டு. ஆனால் சந்நிதியையே கோயிலாகக் கொண்டவன் செல்வச் சந்நிதியான். தொண்டமானாற்றின் கரைதனில் வலதுபுறம் நெல்வயல்களும் கிழக்கே பசுமையான நிலங்களும் இடதுபுறம் பெருங் கடலும் சூழ அழகான சோலையினுள் செல்வச் சந்நிதி முருகன் ஆலயம் அமைந்துள்ளது. அன்னக் கந்தன், அழகிய கந்தன், காவடிக் கந்தன், செல்வக் கந்தன் இன்று பக்தர்களுக்கு அருள்புரிய தேரேறி வருகின்றான். தீராப் பிணி தீர்க்கும் மருத்துவனாகவும் அன்னதானக் கந்தனாகவும் ஏழை அடியார்க்கு இரங்குபவனாகவும் அடியார்கள் சந்நிதியானைக் கண்டு தொழுகின்றனர்.

சின்னக் கதிர்காமம் எனும் சந்நிதியானின் ஆலயமும் பூஜை முறைகளும மற்றைய ஆலயங்களை விட வேறுபாடானவை.

வீரவாகு தேவர் திருச்செந்தூர் செல்லும் வழியில் சூரனைச் சந்திக்கும் முன்னர் தற்போது ஆலயம் அமைந்துள்ள பகுதியில் வேல் ஒன்று வைத்துப் பூஜை செய்தார் என அறியப்படுகின்றது அவ்விடத்தில் உள்ள பூவரசமரம் மிகவும் பிரசித்தி பெற்றது. அதனாற்போலும் யோகர் சுவாமிகள் தொண்டமானாறு மடத்தில் தங்கியிருந்த ஜெர்மன் சுவாமிகள் (கௌரிபாலா) சோல்பரிப் பிரபுவின் மகன் (சந்த சுவாமி), நரிக்குட்டி சுவாமி என அழைக்கப்பெற்ற அவுஸ்திரேலியர் ஆகியோருக்கு இந்தப் பூவரச மரத்தடியில் தியானம் செய்யுமாறு ஒருமுறை கூறியுள்ளார்கள்.

ஜெர்மனியரான அந்த இளைஞருக்கு யோகர் சுவாமிகள் ''சும்மாவிரு கௌரிபாலா'' என அருளுபதேசம் செய்ய அவர் சந்நிதியிலேயே தம் வாழ்நாள் முழுவதையும் கழித்து ''சும்மாவிருக்க ஒரு சூத்திரம்'' என்ற ஒருநூலையும் தமிழில் எழுதியிருந்தார்' அவர் கையிலும் ''சும்மா இரு எனப் பச்சை குத்தியிருந்தார்.

இப்போது செல்வச்சந்நிதி ஆலயம் அமைந்துள்ள இடத்திற்கு மேற்கே, மருதர் கதிர்காமர் என்ற ஏழைக் கடற்றொழிலாளி தொழில் செய்து கொண்டிருக்கும் பொழுது முருகன், இடைச்சிறுவன் வேடத்தில் தோன்றி இக்கரைக்கு வரும்படியும் வந்து தமக்குப் பூசைசெய்யும் படியும் கேட்டதாகவும் —

### வாய்கட்டிப் பூசை

அப்பொழுது கதிர்காமர் தாம் சற்றேனும் படிப்பறிவில்லாதவரென்றும் பூசை செய்வது தமக்கு இயலாத காரியம் என்றும் கூறிய போது ''நீ தான் எனக்குகந்தவன்'' என்று சொல்லி, அவருக்கு இங்கிருந்த படியே கதிர்காமக் காட்சியையும், வாய்கட்டிப் பூசை செய்தல் முதலிய எல்லாப் பூசை முறைகளையும் காட்டி கையில் வேலொன்றையும் கொடுத்து மறைந்தார்.

இதைத் தொடர்ந்து மருதர் கதிர்காமர் முருகனுக்குப் பூசை செய்து வழிபட்டார். அதனைப்பின்பற்றி இப்போதும் இத்தலத்தில் வாய்கட்டிப்பூசை செய்யும் முறை கைக்கொள்ளப்படுகிறதுமுருகனும் கதிர்காமரும் அமர்ந்து கதைத்ததாகக் கூறப்படும் இரண்டு திண்ணைகளும் தற்போதும் பேணப்பட்டு வருவதைக் காணலாம்.

சந்நிதி முருகனின் தேரிலே வீரவாகு தேவர் சூரனிடம் தூதுசெல்லல், சிகண்டி முனிவர் மந்திரத்தை உச்சரித்து வெற்றிலையை எறிய மதயானை அடங்கி ஐராவசுவாக மாறல், ஐராவசு சந்நிதி பூவரசு நிழலில் தியானமிருத்தல், கதிர்காமரை முருகன் வரச்சொல்லி அழைத்தல், கதிர்காமரை முருகன் கதிர்காமம் அழைத்து பூசை முறைகளை அறிந்து 65 ஆலமிலைகளில் உணவு படைத்தல் என்பன அழகாகச் சித்திரிக்கப்பட்டிருந்தன.

### உழுத்தம்பிட்டு பிரசாதம்

மேலும் இரு முக்கிய நிகழ்வுகளையும் நாம் நினைவு கூரலாம். கதிர்காமத்தில் கொடியேற்ற நாளில் செல்வச் சந்நிதி முருகனை கதிர்காமம் அனுப்பும் காட்சி காண்போரை மெய் சிலிர்க்க வைக்கும். அன்று பயணச் சாப்பாடாக உழுத்தம்பிட்டு படைப்பதும் தீப அலங்காரங்களுடன் பக்தர்களும், அருச்சகர்களும் முருகனை கதிர்காமம் அனுப்புதல் கண்கொள்ளாக் காட்சியாகும். அன்று சகல பக்தர்களுக்கும் உழுத்தம்பிட்டு பிரசாதமாக வழங்கப்பட்டு வருகின்றது.

கதிர்காமம் தீர்த்தத் திருவிழாவில் சந்நிதிக் கந்தன் அன்றுநடு நசியில்திரும்புகின்ற வைபவமும் ஒரு சிறப்பான நிகழ்ச்சியாகும் கந்தன் கதிர்காமத்திலிருந்து இங்கு வருவதை அடியார்கள் பக்திப் பரவசத்துடன் கண்டு மகிழ்வர். இதற்கு அத்தாட்சியாக கதிர்காமத்திலும் தீர்த்தத் திருவிழாவிலன்று கந்தனை சந்நிதிக்கு அனுப்புகின்ற புனிதநிகழ்ச்சியைச் சிலரறிவார்கள்.

ஒருநாள் நள்ளிரவு கதிர்காமத்திலிருந்து திரும்பிய கந்தன் பூசகர் கதிர்காமரை நடுநசியில் எழுப்பி ''நான் கதிர்காமத்திலிருந்து பாதயாத்திரையாக இங்கு வந்தமையால் பசி தாகமாக உள்ளேன். உண்பதற்கு ஏதாவது கொடு'' எனக் கேட்க கதிர்காமர் இவ்வேளையில் தங்களுக்கு அமுது படைக்க நான் எங்கு போவேன் என நடுநடுங்கிக் கேட்டார். அதற்கு முருகன் ''உன்னிடம் உள்ள பயற்றைத் துவைத்து இளநீரும்தா'' எனக் கூறினாராம். உடனே அவற்றை கதிர்காமர் முருகனுக்குப் படைக்க அவர் திருவமுது செய்தார்.

அன்று தொட்டு இன்று வரையும் இந்த உற்சவத்தில் பயற்றம் உருண்டையும் இளநீரும் கதிர்காமத்திலிருந்து திரும்பி வருகின்ற பூசைக்கு படைத்து பூசித்து வரும் வழக்கம் உள்ளது.

மேலும் முருகப் பெருமான் வருடத்தில் நடைபெறும் பதினான்கு உற்சவங்களில் பக்தருள் பக்தராக இப்புனித தலத்தில் இருப்பாரென்றும் இப்பதினான்கு நாள்களில் எவரேனும் துட்டத்தனம் பண்ணினால் அடுத்த வருடம் அத்தினத்திற்கு முன் தண்டிக்கப்படுவார் என்பதும் ஒரு நம்பிக்கையாக வளர்ந்துள்ளது.

தீராத வினையெல்லாம் தீர்த்து அருளும் வைத்திய நாதனாக முருகப் பெருமான் சந்நிதியில் வீற்றிருந்து அடியார்களின் அல்லலெல்லாம் தீர்த்து வைப்பது அவரவருக்கு உண்டான அனுபவத்தினால் தெரிவதாகும். சந்நிதிக் கந்தனின் தேரோடும் இந்நாளில் அவனின் கடாட்சம் எல்லோருக்கும் கிடைக்கும் வண்ணம் பிரார்த்திப்போமாக.

—ம சிவயோகசுந்தரம்

## விவசாய உரம் விரைவில் வந்து சேரும்

யாழ்ப்பாணம், ஓக. 27

யாழ். குடாநாட்டு விவசாயிகளுக்குரிய உரவகைகள் விரைவில் வந்து சேரும் என கமநல சேவைகள் நிலையத்தின் யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் திரு. சுந்தரேஸ்வரன் குறிப்பிட்டார்.

ஐந்நூறு மெற்றிக் தொன் ரீ. டீ. எம் உரத்தையும் 600 மெற்றிக் தொன் வீ, 1 உரத்தையும் ஏற்றிவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு உருளைக்கிழங்குப்பயிருக்குரிய கலவை உரமும்எடுத்துவரப் படவிருப்பதாக அவர் குறிப்பிட்டார். (இ-3-5)


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## வெளிவாரிப் பட்டப்படிப்பு பதிவு 1995/96

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 1995/ 96 கல்வியாண்டுக்குப் பின்வரும் கற்கைநெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வுநாடியாகப் பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்றவர்களிடமிருந்து 1996 செப்டெம்பர் 2 ஆம் திகதி தொடக்கம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. வர்த்தக முதற்கற்கை நெறி
2. கலை முதற்கற்கை நெறி
3. பொதுக் கலைமாணி பகுதி I
4. சிறப்புக் கலைமாணி பகுதி I
5. வர்த்தகமாணி பகுதி I

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக் கலைமாணி பகுதி I கற்கைநெறிக்குப் பதிவுசெய்து கொள்ளலாம். இந்து நாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், மெய்யியல், அரசறிவியல், தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம்.

விண்ணப்பப்படிவங்களுக்கு உரிய விவரங்களை வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு அலுவலகத்தில் இருந்து நேரடியாகவோ தபால் மூலமாகவோ 1996 செப்டெம்பர் 2 ஆம் திகதி தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாகப் பெற விரும்புவோர் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கியில் ரூபா 50செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும். தபால் மூலம் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட ரூபா 50க்கான காசுக்கட்டளை/தபாற்கட்டளையுடன் சுயமுகவரியிடப்பட்ட, ரூபா 12–50 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28–20 சென்ரி மீற்றர் அளவுடைய தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

ஏற்கனவே பதிவு செய்துள்ளோருக்கு இவ்வறிவித்தல் ஏற்புடையதல்ல.

— பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(சி/2804)



உ

### அருள்மிகு பொலிகண்டி கந்தவனம் சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம்

பேரன்புடையீர்!

மேற்படி ஆலய இடைக்கால நிர்வாகம் (**23-2-94 —— 3-8-96**) ரத்துச் செய்யப்பட்டு பரம்பரை ஆதீனகர்த்தர்கள் திக்கம் செல்லையாபிள்ளை குடும்பத்தினரிடமே ஒப்படைக்கப்பட்டுவிட்டதென்பதை அறியத் தருகிறோம்.

இடைக்கால நிர்வாகத்தின்போது மேற்கொள்ளப்பட்ட எந்த ஒரு விவகாரத்திற்கும் நாம் பொறுப்பாளிகளல்ல என்பதை அறியத்தருவதுடன் **4 - 8 - 96** முதல் மேற்படி ஆலய செயற்பாடு தொடர்புகளுக்கு செல்வி பா. திக்கம் செல்லையாபிள்ளையுடன் தொடர்பு கொள்ளுமாறு அடியார்கள் அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

பா. செல்லையாபிள்ளை

''கந்தவனம்'' பொலிகண்டி.

(42429)


# ஜெயலலிதாவின் சிறப்புப்பாதுகாப்பு பொலீஸ்படை கலைக்கப்படுகிறது

## தமிழ் நாடு சட்டப் பேரவையில் சட்டமூலம்

சென்னை, ஓக. 27

முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த சிறப்புப் பாதுகாப்பு பொலீஸ் படை கலைக்கப்படுகிறது என்றும்—

இதற்கான சட்ட மூலம் இக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவரப்படும் என்றும் — முதலமைச்சர் கருணாநிதி நேற்றுக் கூறினார்.

இசட் பிரிவு பாதுகாப்பின்படி தற்போது 28 காவலர்கள் ஜெயலலிதாவின் பாதுகாப்புப் பணிக்கு ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள்.

அவரது தனிப் பாதுகாப்புக்கு என கடந்த ஆட்சியில் ஓர் இன்ஸ்பெக்டர் ஜெனரல், 2 காவல்துறை கண்காணிப்பாளர் உள்ளிட்ட 600 காவலர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார். (இ-3)

### உடன் யுத்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகும்.

''வன்னி பெருநிலப்பரப்பில் அகதிகளாக இடம்பெயர்ந்து அவலப்படும் மக்களுக்கு உணவு மற்றும் மருத்துவ உதவி விநியோகம் அவசரமாகச் செய்யப்பட வேண்டும்'' — என்றார்.

**சித்தார்த்தன் கூறியவை**

''புளொட்'' தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கூறியதாவது:-

''போர்நிறுத்தம் அவசியமானது; அனைவரும் அதனை வரவேற்பர். ஆனால் நிரந்தர அமைதியை உருவாக்குவதற்கான பேச்சுவார்த்தைகளுக்கு வழிகோலுவதாக அது இருக்கவேண்டும். முன்னரை விட மூர்க்கத்தனமான போரை முன்னெடுப்பதற்கு ஓர் ஆயத்தமாக அது இருக்கக் கூடாது'' — என்றார்.

போர் நிறுத்தத்தை வலியுறுத்தி ஈ. பி ஆர். எல். எவ். செயலாளர் நாயகம் திரு. சுரேஸ் கே. பிரேமச்சந்திரன், ஈரோஸ் பிரமுகர் சுதா மாஸ்டர் ஆகியோரும் கருத்து வெளியிட்டனர்.

**டக்ளஸ் கூறுவது**

ஈ. பி டி. பி. செயலாளர் நாயகம் திரு. டக்ளஸ் தேவானந்தா கூறியதாவது:-

''அரசோ, புலிகளோ மக்களின் பிரச்சினையை முதன்மைப்படுத்தி போரிடுவதாகத் தெரியவில்லை. எனவே போர் நிறுத்தத்துக்கு இருவரும் ஒப்புதல் தெரிவிப்பார்கள் என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை. புலிகளிடம் நாம் எதுவும் கோர முடியாது: ஆனால் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட காரணத்தால் அரசுக்கு சில வகையான அரசியல் அழுத்தங்களைக் கொடுப்பதன் மூலம் அரசு தற்காப்பு நிலையில் இருந்து கொண்டு, பிரச்சினைகளுக்கு சுமுகத் தீர்வைக் காண்பதற்கு வலியுறுத்துவோம் — என்றார். (உ)

### கடைசி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யில் முடிவெடுப்பதை ஒத்திவைத்தமைக்கு சில சர்வதேச அழுத்தங்கள் காரணமாக இருக்கலாம் என்று சில அமைச்சர்கள் கருதுவதாக சண்டே ரைம்ஸ் அரசியல் செய்தியாளர் மேலும் தெரிவிக்கிறார். (இ)

### அனுருத்த..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிராக பொலீஸில் அனுரா முறைப்பாடு செய்யவிருந்தார்.

இரத்தினபுரி கூட்டத்தைத் தொடர்ந்து குருநாகல், பதுளை போன்ற இடங்களில் நடைபெற்ற கூட்டங்களிலும் அனுராவின் பிறப்புத் தொடர்பாக இழிவான கருத்துகளை அமைச்சர்கூறியதாகக் கொழும்புப்பத்திரிகை ஒன்று குறிப்பிட்டது.

அனுராவைத் தூற்றும் விதத்தில் அமைச்சர் ஆற்றிய உரையின் விவரம் அடங்கிய நோட்டீஸுகள் கடந்த புதனன்று கொழும்புக் கோட்டைப் பகுதியில் விநியோகிக்கப்பட்டதாகவும் —

அதனையடுத்தே இந்த விவகாரத்தில் கடும் சட்ட நடவடிக்கை எடுக்க அனுராதரப்பினர் தீர்மானித்ததாகவும் கூறப்படுகின்றது.

### ''வீட்டிலேயே..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டும் அனுநத்த ரத்வத்தை தமது கருத்துக்களை வலியுறுத்தி வருவதால், தமது மௌனத்தைக் கலைத்து நேரடியாகக் களத்தில் குதித்திருப்பதாகக் கூறப்படுகின்றது. அதன் விளைவே சிறிமாவோ தற்போது அனுருத்தவுக்கு எழுதியிருக்கும் கடிதம்.

இந்தக் கடிதத்தை கொழும்புச் செய்தி நிறுவனங்கள் மிக முக்கியத்துவம் கொடுத்து நேற்று வெளியிட்டன.

இந்த மோதலில் பிரதமரும் நேரடியாகக் களத்தில் குதித்திருப்பதால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் அமைச்சரவையில் பெரும் குளறுபடிகளை அது தோற்றுவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சிறிமாவோ ஜெனரல் ரத்வத்தைக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

''நான் எனது மூன்று பிள்ளைகளையும் மருத்துவமனையில் பெற்றெடுக்கவில்லை; வீட்டிலேயே பெற்றெடுத்தேன். மருத்துவமனையில் மகப்பேற்றின்போது பிள்ளைகள் மாற்றப்பட்டுள்ளன என்ற சந்தேகம் தங்களுக்கு இருக்குமானால் அதைக் கைவிட்டுவிடுங்கள். அந்தச் சந்தேகம் தவறானது.

''இனிமேலாவது எனக்கும் என் பிள்ளைகளுக்கும் அவமானம் ஏற்படுத்தும் விதத்தில் செயற்படுவதைக் கைவிட்டு, பொறுப்புடன் செயற்படுங்கள். பண்டாரநாயக்கா குடும்பத்தவர்களுக்கு அவமானத்தை ஏற்படுத்த வேண்டாம்.'' — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

### கிரிக்கெட்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

''புலிகளைத் தடை செய்ய வேண்டும்'' என்று ஒரு பகுதியினரும் ''புலிகளைத் தடை செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் பேச்சுவார்த்தைக்கான கதவுகள் நிரந்தரமாகவே மூடப்பட்டுவிடும்'' என்று இன்னொரு பகுதியினரும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டதாக அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## பாண் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 27

கோதுமை மாவின் விலை கிலோ ஒன்றுக்கு 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஒரு கிலோ கோதுமை மாவின் மொத்த விலை 16 ரூபா 50 சதம் என்றும்—

சில்லறை விலை 16 ரூபா 98 சதம் என்றும்—தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு இணங்க பாணின் விலை இன்று முதல் 5 ரூபா 75 சதத்தில் இருந்து 6 ரூபா 75 சதமாக உயர்த்தப்பட்டிருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரசாங்கம் கோதுமை மா மானியத்துக்காக வருடம் தோறும் 700 கோடி ரூபா செலவிடுகிறது. மானியத்தைக் குறைப்பதே விலை ஏற்றத்துக்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-10]

## கொடுப்பனவு கந்தரோடை தபாலகத்தில்

வலிகாமம்தெற்கு, ஓக. 27

அளவெட்டி, தெல்லிப்பளை தபாலகங்களிலும், உபதபாலகங்களிலும் மாதாந்த பொதுசன உதவிப் பணம், புற்றுநோயாளருக்கான உதவிப்பணம் பெற்று வந்தவர்களுக்கான கொடுப்பனவுகள் கடந்த ஒரு வார காலமாக கந்தரோடை உப தபால் நிலையத்தினால் வழங்கப்பட்டு வருகின்றன.

அளவெட்டி, தெல்லிப்பளை. தபாலகங்கள் தற்போது யாழ்ப்பாணத்தில் செயற்படுவதால் இப்பகுதி மக்கள் தமது அலுவல்களைப் பெறுவதில் பலசிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். (இ-152)

### ஈழத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தனர்.

இந்த ஊர்வலம் பற்றி விடுதலைப் புலிகள் பிரமுகர் லோறன்ஸ் திலகர் கூறியதாவது:-

வெளிநாடுகளில் உள்ள அரசாங்கங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்கள் பிரயோகிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அப்படியான நோக்கத்துடனேயே தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் ஆயுதப் போராட்டத்தையும் அங்கீகரிக்குமாறும் —

ஸ்ரீலங்கா அரசின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக அழுத்தம் கொடுக்குமாறும் — வெளிநாட்டு அரசாங்கங்களையும் ஐ.நா.சபையையும் கோரும் வகையிலேயே இப்படியான ஆர்ப்பாட்டங்களை பல்வேறு நகரங்களில் நடத்தி வருகிறோம் — என்றார். (இ-3)


# யாழ். மாவட்ட விவசாயிகளே!

உங்கள் விவசாயப் பயிர்களுக்கு

## ''லங்கெம்''

விவசாய இரசாயன கிருமி நாசினிகளை நாளை முதல் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

# துர்க்கா களஞ்சியம்

125, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(424 19)


மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 27-08-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.